

# காவிரி நதிநீர் பங்கீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் உரைகள்

# காவிரி நதிநீர் பங்கீடு

வெளியீடு :
இயக்குநர்,
செய்தி – மக்கள் தொடர்புத்துறை,
சென்னை .

சிறப்பு வெளியீடு எண்.14

# தமிழரசு இலவச வெளியீடு

டிசம்பர் 2012

வெளியிடுபவர் :

இயக்குநர்,

செய்தி – மக்கள் தொடர்புத்துறை,

சென்னை .

அச்சிட்டோர் :

தமிழரசு அச்சகம்,

110, அண்ணா சாலை,

சென்னை – 600 002.

## பொருளடக்கம்


1. புதுடெல்லியில் 19.9.2012 அன்று நடைபெற்ற
காவேரி நதிநீர் ஆணையக் கூட்டத்தில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய உரையின் தமிழாக்கம் .................................................. 5

2. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
2.11.2012 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்
காவேரி நதிநீர்ப் பங்கீடு குறித்துக் கொண்டு
வரப்பட்ட சிறப்புக் கவனஈர்ப்புத் தீர்மானத்திற்குப்
பதில் அளித்து ஆற்றிய உரை .................................................. 15

3. பெங்களூருவில் 29.11.2012 அன்று
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
மாண்புமிகு கருநாடக முதலமைச்சர்
திரு. **ஜெகதீஷ் ஷெட்டர்** அவர்களிடம்
வலியுறுத்தல் .................................................. 25

4. மாண்புமிகு பாரதப் பிரதமர்
டாக்டர் **மன்மோகன்சிங்** அவர்களுக்கு
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
எழுதியுள்ள கடிதத்தின் தமிழாக்கம் (23.8.2012) .................................................. 30

## புதுடெல்லியில் 19.9.2012 அன்று நடைபெற்ற காவேரி நதிநீர் ஆணையக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையின் தமிழாக்கம்

காவேரி நதிநீர் ஆணையத்தின் 7 ஆவது கூட்டம், 9 ஆண்டுகால நீண்ட இடைவெளிக்குப் பின்னர், அதுவும் எனது இடைவிடாத முயற்சிகள் மற்றும் உச்சநீதிமன்றத்தின் தலையீட்டை அடுத்துக் கூட்டப்பட்டுள்ளது.

கருநாடக மாநிலத்தில் உள்ள அனைத்து நீர்த்தேக்கங்களும் நிரம்பும் வரையில் காவேரி நதிநீரில் தனக்கு மட்டுமே முழு உரிமை உள்ளதாக அறிவித்து, ஆணவப் போக்குடன் கருநாடக அரசு செயல்பட்டு வருகிறது. அந்த மாநிலத்திடமிருந்து, காவேரி நதிநீரில் சட்டப்படி உரிமையுள்ள பங்கைப் பெறுவதில் தமிழகம், இத்தனை ஆண்டுக் காலமாகச் சொல்லொணாத் துயரங்களை எதிர்கொண்டு வருகிறது. இந்த நிலையில், பெரிய மாற்றம் ஏதும் ஏற்பட்டுவிடப் போவதில்லை என்ற உணர்வுடன்தான், நான் இந்தக் கூட்டத்திற்கு வந்துள்ளேன்.

கருநாடகத்திலிருந்து தண்ணீர் திறந்துவிடக் கோரி உச்சநீதிமன்றத்துக்கும், காவேரி நதிநீர் ஆணையத்திற்கும் இடையே தமிழகம் அலைக்கழிக்கப்படுவது, இது முதல்முறை அல்ல. தமிழகத்திற்கு உரிமையுள்ள தண்ணீரைப் பெற முடியாமல் தவிக்கும் போது, கருநாடக மாநிலமோ, அதன் அனைத்து அணைகளையும் நிரப்பிக்கொண்டு, அம்மாநில விவசாயத்திற்குப் பாசனவசதி அளிக்கிறது. மத்திய அரசோ, தமிழக விவசாயிகளின் துயர நிலையைக் கண்டுகொள்ளாமல்

பாராமுகமாக இருந்து வருகிறது. பல மாநிலங்கள் வழியாகப் பாயும் நதி நீரை, கருநாடக மாநிலம் தடுப்பது, நீதிமன்ற உத்தரவுகளை முற்றிலுமாக அவமதிக்கும் செயலாகும். அதிலும் குறிப்பாக, ரோம் நகர் பற்றி எரிந்த போது ஃபிடில் வாசித்த நீரோ மன்னன் போன்று, இந்தப் பிரச்சினையில் மத்திய அரசு செயல்படுவது கூட்டாட்சி முறையின் அடித்தளத்தையே ஆட்டம் காணவைப்பதாக அமைந்துள்ளது.

காவேரி நதிநீர்ப் பிரச்சினை குறித்த உத்தரவில், உச்சநீதிமன்றம் 1991ஆம் ஆண்டு நவம்பர் 22ஆம் நாள், குடியரசுத் தலைவருக்குப் பரிந்துரைத்த சிறப்புக் குறிப்பில், பல மாநிலங்களுக்கு உரிமையுள்ள நதிநீர், சம்பந்தப்பட்ட மாநிலங்கள் வழியாகப் பாய்ந்து செல்லும் வழியில், எந்தவொரு மாநிலமும், அந்த நதி, தனது பகுதியில்தான் உள்ளது என்றும், ஓரிடத்தில் தங்காமல் பாய்ந்தோடிக் கொண்டிருக்கும் நதிநீரை, எந்தவொரு மாநிலமும், மற்ற மாநிலங்களுக்கு உரிய பங்கைப் பறிக்கும் வகையில் தனக்கு மட்டுமே சொந்தம் என்றும் உரிமை கொண்டாட முடியாது என உச்சநீதிமன்றத்தின் பரிந்துரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழகத்தின் உயிர்நாடியான காவேரி நதி, 45 சதவீத பாசனத்தேவையைப் பூர்த்தி செய்வதையும், காவேரி டெல்டா விவசாயிகள், விவசாயத்திற்காக மேட்டூர் தண்ணீரை மட்டுமே நம்பியுள்ளதையும் பிரதமர் அறிவார். 15 இலட்சம் ஏக்கரில் சாகுபடி செய்யும் விவசாயிகள், மேட்டூர் அணையிலிருந்து திறந்துவிடப்படும் தண்ணீரைத்தான் முழுமையாக நம்பியுள்ளனர்.

காவேரி நதிநீர் நடுவர் மன்றம் 2007ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 5ஆம் தேதி, தனது இறுதி ஆணையைப் பிறப்பித்தது. இந்த ஆணை, மத்திய அரசின் அரசிதழில் வெளியிடப்பட வேண்டுமென நான் மீண்டும் மீண்டும் பலமுறை வேண்டுகோள்

விடுத்தும், இந்த இறுதி ஆணையை மத்திய அரசு இதுவரையில் அரசிதழில் வெளியிடவில்லை.

எனவே, இந்த இறுதி ஆணை அரசிதழில் வெளியிடப்படும் வரை, காவேரி நதிநீர் நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை, அனைத்து விதமான பிரச்சினைகளையும் கட்டுப்படுத்தும் உத்தரவாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

மேலும், நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணை செயல்படுத்தப்படுவதைக் கண்காணிக்க காவேரி கண்காணிப்புக் குழுக் கூட்டம், 3 மாதங்களுக்கு ஒருமுறை நடைபெற வேண்டும் என்பதைச் சட்டப்பூர்வமாக அறிவிக்க வேண்டும்.

விவசாயப் பாசனத்திற்குத் தண்ணீர் தேவைப்படும் ஜுன், ஜுலை, ஆகஸ்ட், செப்டம்பர் ஆகிய மாதங்களில், மேட்டூர் அணைக்கு மொத்தம் 137 டி.எம்.சி. தண்ணீரைக் கருநாடகம் திறந்துவிட வேண்டும் என்றும், இதனை, மாதாந்திர மற்றும் வாராந்திர அடிப்படையில் திறந்து விட வேண்டும் என்றும் நடுவர் மன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்த உத்தரவைக் கருநாடக அரசு தொடர்ந்து புறக்கணித்து வருவதை மிகுந்த வேதனையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேட்டூர் அணைக்குத் திறந்துவிடப்படவேண்டிய தண்ணீரின் மொத்த அளவு, டிசம்பர் மாதம் இறுதியில்தான் கணக்கிடப்படும் என கருநாடக அரசு எடுத்துள்ள முடிவு மனிதத்தன்மையற்ற நடவடிக்கை.

"காவேரி பாயும் கடைமடை மாநிலங்களுக்குக் காவேரி நதிநீர் நடுவர் மன்ற உத்தரவின்படி மேட்டூர் அணைக்கு கருநாடக அரசு தண்ணீர் திறந்துவிடுகிறதா என்பதை மத்திய அரசு கண்காணிக்கத் தவறியதால் ஏற்கெனவே இந்த ஆண்டில் ஒரு பருவ சாகுபடியில் இழப்பு ஏற்பட்டுள்ளதை மிகுந்த வேதனையுடன் சுட்டிக்காட்டுகிறேன்".

கருநாடக மாநிலம், தனது கோடைகால பாசனத்திற்காகக் காவேரி நீரை அநியாயமாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளது. இதுவரை கிடைத்துள்ள தண்ணீர் முழுவதையும் தேக்கி வைத்துக் கொண்டதால், மேட்டூர் அணையைப் பாசனத்திற்காக வழக்கமாகத் திறந்துவிடும் ஜுன் 12ஆம் நாளன்று, இந்த ஆண்டில் திறந்துவிட முடியவில்லை.

மேட்டூர் அணையில் போதுமான தண்ணீர் இல்லாதபோதும், குறைந்த பட்சம் சம்பா சாகுபடியை மட்டுமாவது காப்பாற்ற வேண்டும் என்பதால், தமிழக விவசாயிகளின் நலன்கருதி, நேற்று முன்தினம்தான், மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. ஆயினும், தற்போதைய நிலவரம் மிகவும் கவலை அளிப்பதாக உள்ளது.

மேட்டூர் அணையின் தற்போதைய சுமார் 45 டி.எம்.சி தண்ணீர் இருப்பு, 30 நாட்களுக்குக் கூட போதாது. ஆனால், கருநாடகத்தில் உள்ள முக்கிய நீர்த்தேக்கங்களிலோ, அவற்றின் மொத்தக் கொள்ளளவில் 80 சதவீத தண்ணீர் இருப்பில் உள்ளது.

தென்மேற்குப் பருவமழை தவறியது போன்று, வடகிழக்குப் பருவமழையும் கைவிட்டால், டெல்டா விவசாயிகளின் எதிர்பார்ப்புகளும், நம்பிக்கைகளும் கானல் நீராகிவிடும். கருநாடக மாநில நீர்த்தேக்கங்களில் உள்ள தண்ணீர் முழுவதையும், அதன் கோடைகாலப் பாசனத்திற்காக அம்மாநில அரசு பயன்படுத்துவதைத் தடுக்க வேண்டும் என்றும், நடுவர் மன்ற இடைக்கால உத்தரவின்படி, தமிழகத்திற்குத் தண்ணீர் திறந்து விடுவதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் நான் திரும்பத் திரும்ப விடுத்த வேண்டுகோள்களுக்கு, மத்திய அரசு துளியும் செவிசாய்க்கவில்லை.

பிரதமருக்கு நான் எழுதிய அடுத்தடுத்த கடிதங்களுக்கு, ஒரே ஒரு கடிதத்தைத் தவிர, வேறு எதற்கும் எந்த பதிலும் வரவில்லை. கூட்டாட்சி முறையில் பிரதமரிடமிருந்து ஒரு நியாயமான பதிலை, ஒரு முதலமைச்சர் எதிர்ப்பார்ப்பது வரம்புமீறிய செயலா ?

எது எப்படியிருந்தாலும், காலம் தாழ்த்தாமல் உடனடியாகக் கருநாடகத்திலிருந்து தண்ணீர் திறந்துவிடுவது, அவசரத் தேவை என்பதைப் பிரதமர் உணர வேண்டும். இந்த உடனடித் தேவை நிறைவேற்றப்பட்டால் மட்டுமே, தமிழக விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படும். காவேரி கடைமடை மாநிலங்களின் தேவைக்கேற்ப தண்ணீர் திறந்துவிடப்பட வேண்டும் என்பதற்குக் கருநாடக மாநில அரசு எதிர்ப்புத் தெரிவித்தபோது, மேட்டூர் அணைக்கு மாதம்தோறும் திறந்துவிடப்பட வேண்டிய தண்ணீரின் அளவை காவேரி நதிநீர் நடுவர் மன்றம் திட்டவட்டமாக அறிவித்தது. இதன்படி, கருநாடகத்திலிருந்து மேட்டூருக்கு மாதம்தோறும் தண்ணீர் திறந்துவிடப்படுகிறதா என்பதைப் பிரதமர் உறுதிப்படுத்த வேண்டும்.

காவேரி நதிநீர் நடுவர் மன்றம், 1991ஆம் ஆண்டு ஜூன் 25ஆம் நாள் பிறப்பித்து, தற்போது நடைமுறையில் உள்ள இடைக்கால ஆணையையும் கருநாடக அரசு செயல்படுத்தவில்லை. 2007ஆம் ஆண்டு பிப்ரவரி 5ஆம் நாள் பிறப்பிக்கப்பட்ட இறுதி ஆணையையும் கருநாடக அரசு செயல்படுத்தவில்லை.

கருநாடக அரசு, உச்சநீதிமன்றத்தில் கடந்த மாதம் 24ஆம் தேதி தாக்கல் செய்த மனுவில், டிசம்பர் மாதம் வரை மேட்டூர் அணைக்குத் தண்ணீர் திறந்துவிட வேண்டியது, தனது கடமை

அல்ல எனத் தெரிவித்துள்ளது. காவேரி நதிநீர் நடுவர் மன்றத்தின் உத்தரவுகளை முற்றிலுமாக அவமதிக்கும் வகையில், கருநாடக அரசு இவ்வாறு தெரிவித்துள்ளதுடன், தமிழகத்திற்கு அநீதி இழைத்துள்ளதையும் அறிந்துள்ள மத்திய அரசோ பாராமுகமாக உள்ளது.

கருநாடக மாநிலம் வழியாகப் பாயும் காவேரி நதிநீர் முழுவதும், தனக்கே சொந்தமென அறிவித்துள்ள கருநாடக அரசு, பல நூற்றாண்டுகளாகத் தமிழகத்தில் பாதுகாக்கப்பட்டு வரும் பாரம்பரிய ஆயக்கட்டுப் பகுதிகளின் பாசனத் தேவையை நிறைவேற்றுவது, தனது பொறுப்போ, கடமையோ அல்ல என்றும் தெரிவித்துள்ள செயல், கடைமடை மாநிலங்களைப் பிணைக்கைதிகள் போன்ற நிலையில் சிக்கவைத்துள்ளதை வெட்ட வெளிச்சமாக்கியுள்ளது.

ஒவ்வொரு பாசன ஆண்டிலும், ஜுன் மாதத்திலிருந்து செப்டம்பர் மாதம் வரையிலான மிகமுக்கியமான காலகட்டத்தில், தமிழகத்திற்குத் தேவையான தண்ணீரைக் கருநாடக அரசு திறந்துவிடத் தவறுவதால், தமிழகத்தின் விவசாய உற்பத்தி மிகக்கடுமையாகப் பாதிக்கப்படுகிறது. மேலும், தமிழகத்தின் மொத்த உணவு தானிய விநியோகமும் சீர்குலைந்து, இதன் விளைவாக ஒட்டுமொத்த தேசத்திற்கும் இழப்பு ஏற்படுகிறது.

கடந்த பிப்ரவரி 1ஆம் தேதி நிலவரப்படி, கருநாடகத்தில் உள்ள 4 பெரிய நீர்த்தேக்கங்களில் மொத்தம் 58.5 டி.எம்.சி தண்ணீர் இருப்பு இருந்தது. இது, கடந்த ஜுன் 1ஆம் தேதி 22.2 டி.எம்.சியாகப் பெருமளவில் குறைந்துவிட்டது. காவேரி நடுவர் மன்ற உத்தரவுகளுக்கு மாறாக, கோடைக்காலப் பாசனத்திற்காக சுமார் 36.3 டி.எம்.சி. தண்ணீரை மட்டுமல்லாமல், இந்த மாதங்களில், தண்ணீர் வரத்து முழுவதையும் கருநாடக மாநிலம்

பயன்படுத்திக் கொண்டது. தென்மேற்குப் பருவமழைக் காலத்தில், தனது நீர்த்தேக்கங்களில் உபரிநீர் சேரும் வரை, மொத்தத் தண்ணீரையும் கருநாடக அரசு தேக்கி வைத்துக் கொண்டு, தமிழகத்தில் செயற்கையான ஒரு வறட்சியை ஏற்படுத்தியது. புவியியல் ரீதியில், காவேரி நதி பாயும் கடைநிலை மாநிலமாகத் தமிழகம் அமைந்துள்ளதால், தமிழக மக்கள் பெரும் துயரில் சிக்கும் நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர்.

காவேரி நடுவர் மன்ற உத்தரவின்படி, இந்த ஆண்டில் கடந்த 15ஆம் தேதி நிலவரப்படி, மேட்டூர் அணைக்கு 122.32 டி.எம்.சி. தண்ணீர் கிடைத்திருக்க வேண்டும். ஆனால் 19.4 டி.எம்.சி தண்ணீர் மட்டுமே கிடைத்துள்ளது. இதனால், குறுவைச் சாகுபடி அடியோடு பாதிக்கப்பட்டது.

கருநாடக மாநிலத்திற்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக யூகித்துக் கொண்டால் கூட, மத்திய நீர்வள ஆணையம் வகுத்துள்ள வறட்சி கால பங்கீட்டு விதிமுறைப்படி, தமிழகத்திற்குக் கடந்த 15ஆம் தேதி வரை, கூடுதலாக 48.5 டி.எம்.சி தண்ணீர் கிடைத்திருக்க வேண்டும். ஜுன் மாதத்தில், கருநாடகத்தில் தண்ணீர் இருப்பு நிலவரத்தைக் குறைத்து மதிப்பிட்டிருக்க வாய்ப்பு உள்ளது. தற்போது, கருநாடகத்தின் 4 நீர்த்தேக்கங்களில், கபினி, ஹேமாவதி, ஹேரங்கி ஆகிய 3 அணைகள் முழுமையாக நிரம்பியுள்ளன. 4ஆவது நீர்த்தேக்கமான கிருஷ்ணராஜசாகர் அணை, வேகமாக நிரம்பி வருகிறது.

எனவே, காவேரி நீரில் தமிழகத்திற்கு உரிய பங்கினை உடனடியாகத் திறந்துவிட பிரதமர், கருநாடகத்திற்கு உத்தரவிடுவார் என நான் எதிர்பார்த்தேன். இக்கட்டான ஒரு சூழலில் கூடும் இந்தக் கூட்டத்தில், நதிநீர்ப் பங்கீடு குறித்து ஒரு

முடிவு எடுத்தாக வேண்டும். கடந்த 18.05.2012ஆம் நாளன்று பிரதமருக்கு நான் எழுதிய கடிதத்தில் தமிழகத்தில் உருவாகியுள்ள இக்கட்டான சூழல் குறித்து தெளிவாக எழுதியுள்ளேன். 03.04.1992 இல் காவேரி நடுவர் மன்றம் வழங்கிய உத்தரவிற்கு எதிராக குறைவான நீர் வழங்கும் பட்சத்தில், இக்கட்டான சூழல்கள் எதிர்காலத்தில் எழுந்தால் விகிதாச்சார அடிப்படையில், நீரைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

10.10.2001இல் கூடி, காவேரி நதிநீர் ஆணையம் தனது 3ஆவது கூட்டத்தில் அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய, சமச்சீரான ஆலோசனைகளைச் சம்பந்தப்பட்ட மாநிலங்கள் ஆணையத்தில் பார்வைக்கு வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

அதனடிப்படையில், மத்திய நீர்வள ஆணையம், அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய சமச்சீரான நடைமுறையை 27.08.2002ஆம் ஆண்டு வகுத்தளித்தது. அதனைத் தொடர்ந்து, காவேரி நதிநீர் ஆணையத் தலைவர், அது குறித்த இறுதியான வரையறையை 15.09.2002ஆம் தேதிக்குள் உருவாக்குமாறு, காவேரி கண்காணிப்புக் குழுவைக் கேட்டுக் கொண்டார்.

பின்னர் உச்சநீதிமன்றம், சம்பந்தப்பட்ட மாநிலங்கள் இக்கட்டான காலங்களில் காவேரி நீரைப் பகிர்ந்து கொள்ளும் வகையில், இறுதியான வரையறையை உருவாக்குமாறு 03.9.2002ஆம் நாளன்று, காவேரி நதிநீர் ஆணையத்துக்கு உத்தரவிட்டது.

அதன் பின்னர், 2003ஆம் ஆண்டு மத்திய நீர்வள ஆணையம், ஒரு வரையறையை இறுதி செய்தது. அதனை

காவேரி கண்காணிப்புக் குழுவும் ஏற்றுக் கொண்டது. அதற்கு காவேரி நதிநீர் ஆணையம் இன்னும் ஒப்புதல் வழங்கவில்லை.

இக்கட்டான சூழ்நிலைகளில் காவேரி நீரைப் பகிர்ந்து கொள்வது குறித்து தனது ஒப்புதலைத் தமிழகம் ஏற்கெனவே தெரிவித்துள்ளது. அந்த வரையறை என்பது, இக்கட்டான காலங்களில் கருநாடக அணைகளுக்கு வரும் தண்ணீரின் அளவைப் பொறுத்து உருவாக்கப்பட்டது. தமிழகத்தில் இப்போது ஏற்பட்டிருக்கும் இக்கட்டான சூழ்நிலையில், கருநாடகா தனது முக்கியமான 4 அணைகளுக்கு வரும் தண்ணீரின் அளவை, அந்த வரையறையின்படி பகிர்ந்து கொள்வதை உறுதிப்படுத்த வேண்டும்.

இந்தக் கூட்டத்திலேயே இக்கட்டான சூழ்நிலைகளில் காவேரி நீரைப் பகிர்ந்து கொள்ளும் வரையறைக்கு ஒப்புதல் வழங்க வேண்டும். அதன்படி, தமிழகத்திற்கு நியாயமாகச் சேர வேண்டிய தண்ணீரை உடனடியாகத் திறந்துவிடுமாறு கருநாடகத்திற்கு உத்தரவிடவேண்டும்.

கருநாடகம், பாசனத்திற்காகக் காவேரி நீரைப் பயன்படுத்துகின்ற விளைநிலங்களின் பரப்பளவு குறித்து காவேரி நதிநீர் ஆணையம் கவனத்தில் கொள்ள வேண்டியது இப்போதைய முக்கியமான பிரச்சினை. 25.06.1991ஆம் நாளன்று காவேரி நடுவர் மன்றம், பிறப்பித்த இடைக்கால உத்தரவில், கருநாடக மாநிலம் தனது பாசன நிலங்களின் பரப்பை 11 இலட்சத்து 20 ஆயிரம் ஏக்கர் என்கிற அளவுக்கு மேல் அதிகப்படுத்தக் கூடாது என உத்தரவிட்டது.

ஆனால், கருநாடகம், தனது திட்டவாரியான விவரங்களைக் காவேரி நடுவர் மன்றத்திற்கு அளிக்கவில்லை.

அதனைத் தொடர்ந்து, கருநாடகம் தனது திட்டவாரியான விவரங்களை வருடந்தோறும் வழங்க வேண்டும் என அறிவுறுத்த வேண்டும். பாசன வரம்பை மீறுகிறதா என்பது குறித்து கண்காணிக்க உத்தரவிட வேண்டும்.

தமிழகத்திற்குக் கருநாடகத்தைத் தண்ணீர் திறந்துவிட வைப்பது குறித்து பிரதமரிடமிருந்து தமிழ்நாடு ஆக்கப்பூர்வமான மற்றும் சரியான நடவடிக்கைகளை எதிர்ப்பார்க்கிறது. 10.9.2012ஆம் தேதி உச்சநீதிமன்றம் உத்தரவிட்டபடி, கருநாடகம் தினமும் 10 ஆயிரம் கன அடி தண்ணீரைச் செப்டம்பர் 20ஆம் தேதி வரை திறந்து விட்டிருக்க வேண்டும்.

காவேரி நதிநீர் ஆணைய விதிகளின்படி, ஆணையக் கூட்டத்தில் ஒருமித்த கருத்து ஏற்படாத பட்சத்தில், தலைவரின் முடிவே இறுதியானது என்பதால், இந்தக் கூட்டத்தின் தலைவராக இருக்கும் தாங்கள் (பிரதமர்), இக்கட்டான சூழ்நிலைகளில் தண்ணீரைப் பகிர்ந்து கொள்ளும் வரைமுறையின் படியும், காவேரி நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவின்படியும் தினமும் 2 டி.எம்.சி அளவுக்கு அடுத்த 24 நாட்களுக்கு 48 டி.எம்.சி தண்ணீர் உடனடியாகத் திறந்துவிடுமாறு கருநாடகத்திற்கு உத்தரவிட வேண்டும்.

இதன் மூலம் மட்டுமே தமிழக விவசாயிகள் காவேரி நதிநீர்ப் படுகையில் பயிரிடப்பட்டிருக்கும் சம்பா பயிரைப் பாதுகாக்கவும், ஒட்டுமொத்தமாகத் தமிழகத்தின் உணவுப் பிரச்சினையைத் தவிர்க்கவும் முடியும்.

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் **2.11.2012** அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் காவேரி நதிநீர்ப் பங்கீடு குறித்துக் கொண்டு வரப்பட்ட சிறப்புக் கவனஈர்ப்புத் தீர்மானத்திற்குப் பதில் அளித்து ஆற்றிய உரை

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டின் ஜீவாதார உரிமைப் பிரச்சினையாக விளங்குவது காவேரி நதிநீர்ப் பிரச்சினை. **1892** ஆம் ஆண்டு மற்றும் **1924** ஆம் ஆண்டைய ஒப்பந்தங்கள் காவேரியில் தமிழ்நாட்டிற்கு உள்ள உரிமையைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

**1924**ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பின்பற்றாமல், **1960**களின் பின் பகுதியிலும், **1970**களின் தொடக்கத்திலும், மத்திய அரசின் ஒப்புதல் இல்லாமலும், காவேரி நதியில் உரிமையுள்ள மாநிலங்களைக் கலந்து ஆலோசிக்காமலும், தன்னிச்சையாகப் பல்வேறு அணைக்கட்டுகளைக் கருநாடக அரசு கட்டியது. ஆண்டுக்காண்டு விவசாய நிலங்களின் பரப்பினையும் கருநாடகா அதிகரித்துக் கொண்டே சென்றது.

இதனையடுத்து, **1956**ஆம் ஆண்டைய மாநிலங்களுக்கிடையே ஆன நதிநீர்த் தாவா சட்டத்தின்படி நடுவர் மன்றமொன்று உருவாக்கப்பட வேண்டும் என்று **1986** ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்கு ஒரு கடிதத்தினை அனுப்பியது. இந்தக் கடிதத்தின் மீதும் மத்திய அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. **1986** ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சிக்காலம்.

இந்தச் சூழ்நிலையில், தமிழ்நாடு காவேரி நீர்ப்பாசன விளைபொருள்கள் விவசாயிகள் நல உரிமைப் பாதுகாப்புச் சங்கத்தினால் தொடுக்கப்பட்ட வழக்கினை விசாரித்த உச்ச நீதிமன்றம், உணர்வுப் பூர்வமான இந்தப் பிரச்சினை குறித்து நடுவர் மன்றத்தை ஏற்படுத்துமாறு 1990 ஆம் ஆண்டு ஓர் உத்தரவினைப் பிறப்பித்தது.

உச்ச நீதிமன்றத்தின் இந்த உத்தரவினைத் தொடர்ந்து, 1986ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சிக் காலத்தில், தமிழக அரசால் அனுப்பப்பட்ட கடிதத்திற்கு உயிர் ஊட்டும் வகையில், காவேரி நடுவர் மன்றத்தை ஜூன் 1990 ஆம் ஆண்டு மத்திய அரசு உருவாக்கியது. இந்த காவேரி நடுவர் மன்றம், 25.6.1991 அன்று பிறப்பித்த இடைக்கால ஆணையில், மேட்டூர் அணைக்கு 205 டி.எம்.சி. அடி நீர் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், கர்நாடகா தனது நீர்த் தேக்கங்களிலிருந்து தண்ணீரைத் திறந்துவிட வேண்டுமென்றும், கர்நாடகா தனது பாசனப் பரப்பை 11.20 இலட்சம் ஏக்கருக்கு மேல் விரிவாக்கம் செய்யக்கூடாது என்றும், இடைக்கால ஆணையில் குறிப்பிட்டுள்ளபடி, மாதாந்திர மற்றும் வாராந்திர அடிப்படையில் தமிழகத்திற்கு நீர் விடுவிக்க வேண்டும் என்றும், இந்த இடைக்கால ஆணை இறுதித் தீர்ப்பு அளிக்கும் வரை நடைமுறையில் இருக்கும் என்றும் தீர்ப்பளித்துள்ளது.

காவேரி நடுவர் மன்றத்தால் அளிக்கப்பட்ட இந்த இடைக்கால ஆணை தமிழகத்திற்கு சாதகமாக இல்லை என்ற போதிலும், காவேரிப் பாசன விவசாயிகளின் உடனடி நலன் கருதியும், மாநிலங்களுக்கிடையே நல்லுறவு நிலவ வேண்டும் என்ற எண்ணத்தோடும், இறுதி ஆணையில் கூடுதலாக நீர் கிடைக்கும் என்ற நம்பிக்கையிலும், தமிழ்நாடு அரசு

இடைக்காலத் தீர்ப்பினை ஏற்றுக்கொண்டது. ஆனால், கருநாடக அரசோ, காவேரி நடுவர் மன்ற ஆணை கருநாடகத்தைக் கட்டுப்படுத்தாது என்று தெரிவித்து, இடைக்கால ஆணையினை அவமதிக்கும் வகையில் ஓர் அவசரச் சட்டத்தினை இயற்றியது. அதனை எதிர்த்து, எனது தலைமையிலான தமிழக அரசு, உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம், காவேரி நடுவர் மன்றம் பிறப்பித்த இடைக்கால ஆணை செல்லும் என்றும், கருநாடக அரசின் அவசரச் சட்டம் செல்லாது என்றும் **22.11.1991** அன்று மத்திய அரசுக்குக் கருத்துரை வழங்கியது. பின்னர் எனது தலைமையிலான அரசின் உறுதியான நடவடிக்கை காரணமாக **10.12.1991** அன்று காவேரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை மத்திய அரசிதழில் மத்திய அரசு வெளியிட்டது.

இருப்பினும், காவேரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணைப்படி ஒருமுறை கூட கருநாடகா நமக்கு தண்ணீரை விட்டதில்லை. மாறாக, உபரி நீரை மட்டுமே கருநாடகா விடுவித்து வந்தது. கருநாடக அரசின் பிடிவாதப் போக்கு காரணமாக, மரபுரிமைப்படி இயல்பாக நமக்குக் காவேரி நதி நீரில் பாசனத்திற்குக் கிடைக்க வேண்டிய தண்ணீரை நாம் வற்புறுத்திக் கேட்டுப் பெறுகின்ற சூழ்நிலைக்கும், நீதிமன்றங்களுக்குச் சென்று ஆணையைப் பெறுகிற சூழ்நிலைக்கும் அவ்வாறு பெற்ற ஆணை மதிக்கப்படாத நிலையில், பயிர்களைக் காப்பாற்ற மத்திய அரசை வற்புறுத்தி நமது உரிமைகளைப் பெறுகிற சூழ்நிலைக்கும் தமிழ்நாடு பலமுறை தள்ளப்பட்டு இருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில், **5.2.2007** அன்று காவேரி நடுவர் மன்றம் தனது இறுதி ஆணையை வெளியிட்டதோடு, இந்த

ஆணையை நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக, காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை அமைக்கவும் பரிந்துரை செய்துள்ளது.

நான் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், **14.6.2011** அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை புது டெல்லியில் நேரில் சந்தித்து, காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிட வேண்டும் என்றும், இந்த ஆணையை நடைமுறைப்படுத்த காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றினை அமைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினேன். இதனைக் கடிதங்கள் வாயிலாகவும் மாண்புமிகு பாரதப் பிரதமரை நான் பலமுறை வலியுறுத்தி இருக்கிறேன். காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிடத் தடை இல்லாத சூழ்நிலையில், "உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு மீதான தீர்ப்பு வந்தபிறகுதான் காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிட முடியும்" என்று மத்திய அரசு தெரிவித்து இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிடவும், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை ஏற்படுத்தவும் மத்திய அரசுக்கு உத்தரவிடுமாறு உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது மட்டுமல்லாமல், உச்ச நீதிமன்றத்தில் உள்ள மேல் முறையீட்டு மனுவை விசாரணைக்குக் கொண்டு வரவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. காவேரி நடுவர் மன்றத்தில் காலியாக உள்ள தலைவர் பதவியை நிரப்ப வேண்டியதன் அவசியத்தைப் பலமுறை வலியுறுத்தியும் மத்திய அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது வேதனைக்குரியது.

இந்தச் சூழ்நிலையில், கருநாடகா தனது கோடைக்கால பாசனத்திற்காக கிருஷ்ணராஜ சாகர், கபினி, ஹேமாவதி மற்றும் ஹாரங்கி நீர்த் தேக்கங்களிலிருந்து தண்ணீரைப் பயன்படுத்தி வருகிறது. கருநாடக அரசின் இந்த நடவடிக்கை மூலம் தமிழகத்தின் குறுவைப் பாசனத்திற்குத் தண்ணீர் கிடைக்காது என்பதைக் கருத்தில் கொண்டு, 21.3.2012 அன்று உச்ச நீதிமன்றத்தில் இடைக்கால மனு ஒன்றினை எனது தலைமையிலான அரசு தாக்கல் செய்தது. இந்த மனுவில், கருநாடகா கோடைப் பாசனத்திற்கு தனது 4 அணைகளிலிருந்து தண்ணீர் விடுவிப்பதைத் தடை செய்ய வேண்டும் என்றும், இறுதி ஆணையில் குறிப்பிட்டுள்ளபடி இந்த 4 நீர்த் தேக்கங்களிலிருந்து 103.24 டி.எம்.சி. அடி நீருக்கு மேல் கருநாடகா பயன்படுத்துவதைத் தடை செய்ய வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது மட்டுமல்லாமல், கருநாடக அரசு அதன் கோடைக்காலப் பாசனத்திற்காக 1.2.2012 முதல் நீரை உபயோகித்துள்ளது என்றும், நீர்த்தேக்கங்களுக்கு வரக்கூடிய நீர்வரத்தினைத் தேக்கி வைத்துக் கொண்டு, நீர்தேக்கங்கள் நிரம்பும் நிலையில் மட்டுமே நீரை கர்நாடகா விடுவித்து வருவதன் காரணமாக மேட்டூர் அணைக்கு வரக்கூடிய நீர்வரத்து குறைந்து குறுவைச் சாகுபடி பாதிப்புக்கு உள்ளாகிறது என்றும் சுட்டிக்காட்டி, விரைந்து காவேரி நதிநீர் ஆணையக் கூட்டத்தினைக் கூட்டுமாறு மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை 18.5.2012 நாளிட்ட கடிதத்தின் மூலம் நான் கேட்டுக் கொண்டேன். ஆனால், மாண்புமிகு பாரதப் பிரதமர் இதற்கு செவி மடுக்கவில்லை.

இதனையடுத்து, தமிழ்நாட்டுடன் குறிப்பிட்ட விகிதாச்சாரப்படியான, அதாவது, Pro-rata sharing, அளவில் நீரைப் பகிர்ந்து கொள்ள கருநாடக அரசுக்கு உத்தரவிட

வேண்டும் என்றும், காவேரி கண்காணிப்புக் குழுவினால் இறுதி செய்யப்பட்டுள்ள இடர்ப்பாடுப் பங்கீட்டு முறைக்கு ஒப்புதல் வழங்கும் வகையில் காவேரி நதிநீர் ஆணையக் கூட்டத்தினைக் கூட்ட உத்தரவிட வேண்டியும் உச்ச நீதிமன்றத்தில் 21.7.2012 அன்று எனது தலைமையிலான அரசு ஓர் இடைக்கால மனுவினைத் தாக்கல் செய்தது.

தமிழகத்தில் நிலவும் இடர்ப்பாட்டினைச் சுட்டிக்காட்டி, குறுவைச் சாகுபடியைத் தமிழக விவசாயிகள் இழந்துவிட்ட நிலையில், குறைந்தபட்சமாக ஒரு போக சம்பா சாகுபடியையாவது விவசாயிகள் மேற்கொள்ள ஏதுவாக, தமிழகத்திற்குரிய நீரைத் திறந்துவிடுமாறு கருநாடக அரசுக்கு அறிவுரை வழங்குமாறு மாண்புமிகு பாரதப் பிரதமரை 23.8.2012 நாளிட்ட கடிதம் வாயிலாகக் கேட்டுக் கொண்டேன்.

எனது தலைமையிலான அரசு எடுத்த உறுதியான தொடர் நடவடிக்கையினை அடுத்து, உச்ச நீதிமன்றத்தின் தலையீட்டின் காரணமாகக் காவேரி நதிநீர் ஆணையக் கூட்டம் 19.9.2012 அன்று புது டெல்லியில் கூட்டப்பட்டது. 12.9.2012 முதல் காவேரி நதிநீர் ஆணையக் கூட்டம் நடைபெறும் வரை நாள்தோறும் வினாடிக்கு 10,000 கன அடி தண்ணீரைக் கருநாடகா தமிழகத்திற்குத் திறந்துவிட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் 10.9.2012 அன்று ஆணைப் பிறப்பித்தது.

19.9.2012 அன்று புது டெல்லியில் நடைபெற்ற காவேரி நதிநீர் ஆணையத்தின் கூட்டத்தில், இடர்ப்பாடுக் காலத்தில் நீரைப் பகிர்ந்து கொள்ளுதல் கணக்கீட்டுப்படி, தமிழ்நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய நீரில் குறைபாடான 48 டி.எம்.சி. அடி நீரை நாளொன்றுக்கு 2 டி.எம்.சி. அடி வீதம் 24 நாட்களுக்கு உடனடியாகத் திறந்துவிட வேண்டுமென்றும், நடுவர் மன்ற

இடைக்காலத் தீர்ப்பின்படி கருநாடகா தொடர்ந்து நீரை விடுவிக்க ஆணை பிறப்பிக்குமாறும் நான் வலியுறுத்தினேன். கருநாடகா இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தது. இந்தக் கூட்டத்தில் இரு தரப்பினரிடையே ஒத்த கருத்து ஏற்படாத சூழ்நிலையில், **20.9.2012** முதல் **15.10.2012** வரை நாளொன்றிற்கு வினாடிக்கு **9,000** கன அடி வீதம் கருநாடகா தமிழகத்திற்கு நீரை விடுவிக்க வேண்டுமென்றும், அதன் பிறகு காவேரிக் கண்காணிப்புக் குழு **15.10.2012** அன்று கூடி சம்பந்தப்பட்ட மாநிலங்களைக் கலந்தாலோசித்து **15.10.2012**–க்கு பிறகு நீர் விடுவிப்பது குறித்து முடிவெடுக்கலாம் என்றும் காவேரி நதிநீர் ஆணையத்தின் தலைவரான மாண்புமிகு பாரதப் பிரதமர் அறிவித்தார். ஆனால், கருநாடக அரசு இதனை ஏற்க மறுத்தது. தமிழகத்திற்குச் சாதகமான முடிவினை மாண்புமிகு பாரதப் பிரதமர் அறிவிக்காததைக் கருத்தில் கொண்டும், மாண்புமிகு பாரதப் பிரதமர் அறிவித்த குறைந்தபட்சத் தண்ணீரைக் கூட விடுவிக்க முடியாது என்று கருநாடகா அறிவித்ததைக் கருத்தில் கொண்டும், எனது எதிர்ப்பினைத் தெரிவித்து, உச்ச நீதிமன்றத்தை மீண்டும் அணுகுவதைத் தவிர வேறு வழியில்லை என்று நான் அறிவித்தேன்.

இதனையடுத்து, நாளொன்றிற்கு **2** டி.எம்.சி. அடி வீதம் **48** டி.எம்.சி. அடி தண்ணீரை அடுத்த **24** நாட்களுக்கு கருநாடகம் தமிழகத்திற்கு விடுவிக்க வேண்டும் என்றும், காவேரி நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பின்படி கருநாடகா தமிழகத்திற்கு நீரை விடுவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசின் சார்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம், காவேரி நதிநீர் ஆணையத்தின் தலைவர் பிறப்பித்த உத்தரவை கருநாடக அரசு செயல்படுத்த வேண்டும் என்று **28.9.2012** அன்று தீர்ப்பளித்தது. இதன்படி,

29.9.2012 முதல் நீரினை விடுவிக்கத் துவங்கிய கருநாடகா, திடீரென்று தன்னிச்சையாக 8.10.2012 அன்று தண்ணீர் விடுவிப்பதை நிறுத்திவிட்டது. இந்திய கூட்டாட்சித் தத்துவத்திற்கு ஊறுவிளைவிக்கும் வகையிலும், உச்ச நீதிமன்றத் தீர்ப்பினை அவமதிக்கும் வகையிலும் நடந்து கொண்ட கருநாடக அரசுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கினை 10.10.2012 அன்று எனது தலைமையிலான அரசு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது.

இந்தச் சூழ்நிலையில் 11.10.2012 அன்று காவேரி கண்காணிப்புக் குழுவின் கூட்டம் புது டெல்லியில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் தமிழக அரசின் சார்பில், தலைமைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தில், நீர்விடுவிப்பதில் ஏற்பட்டுள்ள குறைபாட்டு நீரான 48 டி.எம்.சி. அடி நீரை நாளொன்றுக்கு 2 டி.எம்.சி. அடி வீதம் 24 நாட்களுக்குத் திறந்துவிட வேண்டுமென்றும், கருநாடக அரசு உச்ச நீதிமன்ற ஆணையை மதிக்காததால், உச்ச நீதிமன்றத்தை அணுக வேண்டிய கட்டாயம் தமிழகத்திற்கு ஏற்பட்டது என்றும், இடர்ப்பாடு ஆண்டிலும் கருநாடக அரசு நீரை அதன் நீர்த்தேக்கங்களிலிருந்து தனது பயன்பாட்டிற்காக விடுவித்துள்ளது என்றும் தெரிவித்து, தமிழ்நாட்டின் சம்பா பாசனத்திற்காக 15.10.2012 முதல் 16.2.2013 வரை சுமார் 145 டி.எம்.சி. அடி நீர் தேவைப்படும் என்று தமிழகத்தின் சார்பில் வலியுறுத்தப்பட்டது. எனினும், கருநாடகத்தின் 4 அணைகளில் போதுமான நீர் இருப்பு இருந்தபோதிலும், தமிழகத்திற்கு மேலும் தண்ணீர் வழங்க இயலாது என கருநாடகத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும், 16.10.2012 முதல் 31.10.2012 வரையிலான காலத்திற்கு 8.85 டி.எம்.சி. அடி நீரை கருநாடகா தமிழகத்திற்கு விடுவிக்க வேண்டும் என்று காவேரி

கண்காணிப்புக் குழுவின் தலைவர் தனது முடிவினை அறிவித்தார். இந்த முடிவு தமிழகத்திற்கு எதிரானது என்றும், இடர்ப்பாடுக் காலத்தில் தமிழ்நாட்டிற்குரிய பங்கான 48 டி.எம்.சி. அடி குறைபாடு நீரைக் கணக்கில் கொள்ளாமல் 15 நாட்களுக்கு மட்டும் நீரை அளிக்க உத்தரவிட்டது சரியானது அல்ல என்றும் தமிழகத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. ஆனால், இந்த குறைந்தபட்ச நீரைக் கூட கருநாடகா விடுவிக்க மறுத்துவிட்டது.

இந்தச் சூழ்நிலையில், கருநாடகத்தின் பிடிவாதப் போக்கை எதிர்த்து தமிழகத்தின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு 30.10.2012 அன்று விசாரணைக்கு வந்தபோது, இது தொடர்பான அனைத்து அம்சங்களையும் பரிசீலனை செய்து பரிந்துரை செய்ய வேண்டும் என காவேரி கண்காணிப்புக் குழுவிற்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனையடுத்து, 31.10.2012 அன்று புது டெல்லியில் நடைபெற்ற காவேரி கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில், 31.10.2012 வரை 8.85 டி.எம்.சி. அடி தண்ணீரைத் தமிழ்நாட்டிற்கு விடுவிக்க வேண்டும் என்று காவேரி கண்காணிப்புக் குழு 11.10.2012 அன்று உத்தரவிட்டதில், 2.15 டி.எம்.சி. அடி தண்ணீர் பற்றாக்குறை இருக்கிறது என்றும், காவேரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையின்படி, 2012 நவம்பர் மாதம் முதல் 2013 பிப்ரவரி வரை தண்ணீர் திறந்துவிட உத்தரவிட வேண்டும் என்றும் தமிழகத்தின் சார்பில் எடுத்துரைக்கப்பட்டது.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட காவேரி கண்காணிப்புக் குழு, 16.10.2012 முதல் 31.10.2012 வரை தமிழகத்திற்குத் திறந்துவிட வேண்டிய தண்ணீரில் உள்ள பற்றாக்குறையான 2.15 டி.எம்.சி. அடி தண்ணீரை 4.11.2012–க்குள் விடுவிக்குமாறும், 1.11.2012 முதல் 15.11.2012 வரையிலான

காலத்திற்கு **3.94** டி.எம்.சி. அடி தண்ணீரை விடுவிக்குமாறும், ஆக மொத்தம் **6.09** டி.எம்.சி. அடி தண்ணீரைத் தமிழகத்திற்கு திறந்துவிடுமாறு உத்தரவிட்டுள்ளது. மேலும், உச்ச நீதிமன்ற ஆணைப்படி, தமிழ்நாடு, காவேரி கண்காணிப்புக் குழுவிற்கு அளிக்கவிருக்கும் கோரிக்கைகள் குறித்தும், தமிழகத்திற்கு மேற்கொண்டு தண்ணீர் விடுவிப்பது குறித்தும் 15.11.2012 அன்று நடைபெறும் கூட்டத்தில் முடிவு செய்யப்படும் என்று காவேரி கண்காணிப்புக் குழு கூறியுள்ளது.

தமிழகத்தில் ஏற்கெனவே குறுவைச் சாகுபடி பாதிக்கப்பட்ட நிலையில், சம்பா சாகுபடியை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்ற அடிப்படையில், காவேரியில் தமிழகத்திற்கு உள்ள உரிமையை எப்படியாவது பெற வேண்டும் என்பதன் அடிப்படையில் எனது அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. நான் தொடர்ந்து மேற்கொண்ட முயற்சியினாலும், உச்ச நீதிமன்றத்தின் தலையீட்டாலும் கருநாடகா ஓரளவு தண்ணீரை விடுவிக்கக் கட்டாயப்படுத்தப்பட்டு, தமிழகத்திற்குத் தண்ணீர் கிடைக்கப் பெற்றுள்ளது என்பதை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்திற்கு உரிமைப்படி கிடைக்க வேண்டிய தண்ணீரை கருநாடகத்திடமிருந்து பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதையும், உச்ச நீதிமன்றத்தின் மூலம் தமிழகத்திற்குத் தேவையான தண்ணீர் தமிழகத்திற்குக் கிடைக்கும் என்ற எனது நம்பிக்கையையும் தெரிவித்து அமர்கிறேன்.

## பெங்களூருவில் 29.11.2012 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் மாண்புமிகு கருநாடக முதலமைச்சர் திரு. **ஜெகதீஷ் ஷெட்டர்** அவர்களிடம் வலியுறுத்தல்

தமிழ்நாடு மற்றும் கர்நாடக மாநில விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, காவேரிப் பிரச்சினை குறித்து இரு மாநில முதலமைச்சர்களும் சந்தித்து ஒரு தீர்வு காண வேண்டும் என உச்சநீதிமன்றம் ஆலோசனை தெரிவித்ததையடுத்து, 29.11.2012 அன்று பெங்களூருவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களும், மாண்புமிகு கர்நாடக மாநில முதலமைச்சர் திரு.ஜெகதீஸ் ஷெட்டர் அவர்களும் காவேரி நதிநீர்ப் பங்கீடுப் பிரச்சினை குறித்துப் பேச்சு வார்த்தை நடத்தினர். அப்போது, தமிழகப் பாசனத் தேவை குறித்தும், தண்ணீரின்றி சம்பாப் பயிர்கள் கருகிக் கொண்டிருக்கும் துயர நிலவரம் குறித்தும், புள்ளி விவர ஆதாரங்களுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கமாக எடுத்துரைத்துத் தெரிவித்ததாவது:—

கடந்த செப்டம்பர் 19ஆம் தேதியன்று காவேரி நதிநீர் ஆணையத்தின் 7ஆவது கூட்டம் நடைபெற்ற போது, பிரதமரிடம் தமிழகத்திற்குக் காவேரியில் இருந்து கிடைக்க வேண்டிய தண்ணீர் குறித்துச் சுட்டிக் காட்டினேன். காவேரி நதிநீர் நடுவர் மன்றம், கடந்த 1991ஆம் ஆண்டு ஜுன் 25ஆம் தேதி பிறப்பித்த, இடைக்கால உத்தரவின்படி, மிக முக்கிய காலகட்டமான ஜுன் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை மேட்டூர் அணைக்குக் காவேரியில் இருந்து 137 டி.எம்.சி அடி தண்ணீர் கிடைத்திருக்க

வேண்டும். மேலும், சிக்கலான இந்த ஆண்டில், மத்திய நீர்வள ஆணையம் வகுத்துள்ள இடர்ப்பாடுக் காலப் பங்கீட்டு முறையின்படி தமிழகத்திற்குக் கிடைத்திருக்க வேண்டிய 48.50 டி.எம்.சி அடி தண்ணீரும் மறுக்கப்பட்டதைப் புள்ளி விவரங்களுடன் நான் பிரதமரின் கவனத்திற்குக் கொண்டு சென்றேன். டெல்டா விவசாயிகள் ஏற்கெனவே குறுவைச் சாகுபடியைப் பறிகொடுத்த நிலையில், குறைந்த பட்சம் தற்போது 14 இலட்சத்து 93 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள சம்பா பயிரையாவது விவசாயிகள் காப்பாற்ற ஏதுவாக நாள்தோறும் 2 டி.எம்.சி அடி தண்ணீர் வீதம் 24 நாட்களுக்கு காவேரியில் இருந்து தண்ணீர் திறந்துவிட வேண்டும் என பிரதமரிடம் நான் வலியுறுத்தினேன்.

கடந்த 1991ஆம் ஆண்டு ஜுன் 25ஆம் நாள் காவேரி நடுவர் மன்றம் பிறப்பித்த இடைக்கால உத்தரவின்படி தண்ணீர் திறந்து விடுமாறு கர்நாடக மாநில அரசுக்கு அறிவுறுத்த வேண்டும் எனப் பிரதமரிடம் நான் கேட்டுக் கொண்டேன். மேட்டூர் அணையில் தற்போதைய தண்ணீர் இருப்பு நிலவரம் மிகவும் கவலையளிப்பதாக உள்ளதால் சம்பாப் பயிர் கருகும் நிலையில் உள்ளது. வடகிழக்குப் பருவ மழையும் தமிழக விவசாயிகளை வஞ்சித்துவிட்டது. கடந்த 27ஆம் தேதி நிலவரப்படி, மேட்டூர் அணையில் தேக்கி வைத்திருக்க வேண்டிய கட்டாய இருப்பு மற்றும் குடிநீர்த் தேவைக்காகத் திறந்துவிட வேண்டிய தண்ணீர் அளவு ஆகியவற்றைக் கணக்கிட்டுப் பார்த்தால், விவசாயப் பாசனத்திற்காக 6.4 டி.எம்.சி அடி தண்ணீர் மட்டுமே எஞ்சியுள்ளது. தமிழ்நாடு, கர்நாடகம் ஆகிய இரண்டு மாநிலங்கள் மீது உச்சநீதிமன்றம் வைத்துள்ள நம்பிக்கையைக்

காப்பாற்றும் வகையில், தற்போதைய தண்ணீர்ப் பிரச்சினைக்கு ஒரு சுமூகமான தீர்வு காண்பது மூலம் தமிழக விவாயிகளின் துயரத்தைப் போக்க முடியும் என்ற நம்பிக்கையில்தான், நான் இந்தக் கூட்டத்திற்கு வருகை தந்துள்ளேன்.

அடுத்த ஆண்டு, பிப்ரவரி மாதத்தின் முதல்பாதி நாட்கள் வரை தண்ணீர் தேவைப்படும் நிலையில், ஆண்டுதோறும் ஜுன் மாதத்தில் மேட்டூர் அணை திறக்கப்படுவதற்கு மாறாக, இந்த ஆண்டில், கடந்த செப்டம்பர் 17ஆம் தேதி மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்காகத் தண்ணீர் திறந்து விடப்பட்டது. கர்நாடக அரசு காவேரியிலிருந்து தண்ணீர் திறந்துவிடாததால், மேட்டூர் அணையின் தற்போதைய இருப்பு மிகவும் பற்றாக்குறையாக உள்ளது. பெருமளவிலான விவசாய சமூகத்தினர் சொல்லொண்ணாத் துயரத்தில் சிக்கித் தவிக்கும் நிலையை எதிர்கொண்டுள்ளனர். தண்ணீர்ப் பற்றாக்குறை தொடர்ந்து நீடித்தால் ஏற்கெனவே குறுவைச் சாகுபடியைப் பறிகொடுத்த விவசாயிகளால், சம்பா சாகுபடியையும் காப்பாற்ற முடியாமல் போய்விடும் என்பதைக் கவலையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவேரிக் கண்காணிப்புக் குழு மதிப்பீட்டின்படி, இந்த ஆண்டில் காவேரிப் பாசனப் பகுதிகளுக்குத் தண்ணீர் வரத்து 40 சதவீதம் குறைந்துள்ளது. காவேரி நடுவர் மன்றம் பிறப்பித்த இடைக்கால உத்தரவு, அதனையடுத்த உத்தரவுகள் மற்றும் இறுதி உத்தரவு ஆகிவற்றின்படி, சம்பந்தப்பட்ட அனைத்து மாநிலங்களுக்கு இடையே இடர்ப்பாடுக் காலப் பங்கீட்டு முறையின்படி காவேரி நதி நீர் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும்.

குறைந்தபட்சம் **60** சதவீதத் தண்ணீரைக் கர்நாடக அரசு மேட்டூர் நீர்த் தேக்கத்திற்குத் திறந்துவிட வேண்டும். காவேரி நடுவர் மன்ற இடைக்கால உத்தரவின்படி, ஜுன் மாதம் முதல் அக்டோபர் மாதம் வரையில், தமிழகத்திற்கு **167.16** டி.எம்.சி அடி தண்ணீர் கிடைத்திருக்க வேண்டும். ஆனால், இதற்கு மாறாகத் தமிழகத்திற்கு **47.31** டி.எம்.சி அடி தண்ணீர் மட்டுமே கிடைத்தது. **119.85** டி.எம்.சி அடி தண்ணீர் கிடைக்கவில்லை.

இதனிடையே கடந்த **15.11.2012** நடைபெற்ற காவேரிக் கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டபடி, இடர்ப்பாடுக் காலப் பங்கீட்டு முறையின் அடிப்படையில், தமிழகத்திற்கு **100.85** டி.எம்.சி அடி தண்ணீர் கிடைத்திருக்க வேண்டும். இதிலும், **53.4** டி.எம்.சி அடி தண்ணீர் திறந்துவிடப்படாமல் நிலுவையில் உள்ளது. **27.11.2012** அன்றைய நிலவரப்படி, மேட்டூர் அணையில் பாசனத்திற்காக **6.34** டி.எம்.சி அடி தண்ணீர் மட்டுமே இருப்பு உள்ளது. தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழையும் போதிய அளவிலும், திருப்திகரமாகவும் இல்லாததால், தண்ணீர்ப் பற்றாக்குறை மேலும் அதிகரித்துள்ளது. தற்போது, **14** இலட்சத்து **93** ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள சம்பாப் பயிரைக் காப்பாற்ற, குறைந்தபட்சம் **65** நாட்களுக்காவது தண்ணீர் தேவைப்படுகிறது. தமிழகத்தில், தற்போதைய சம்பா சாகுபடி, முற்றிலுமாகப் பொய்த்துப்போகும் ஆபத்தான நிலையை எதிர்கொண்டுள்ளது. கடந்த **19.9.2011** அன்று நடைபெற்ற காவேரி நதிநீர் ஆணையக் கூட்டத்தில், தங்களிடமும், பிரதமரிடம் அளித்த அறிக்கையில், காவேரிப் பாசனப் பகுதியில் செப்டம்பர் மாதம் வரையில் பற்றாக்குறையாக இருந்த நிலுவைத் தண்ணீர் அக்டோபரிலிருந்து டிசம்பர் மாதத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில் செப்டம்பர் மாதம் வரை பற்றாக்குறை இருந்த தண்ணீர், பின்னர் வழங்கப்பட்டு வந்ததாகவும் குறிப்பிட்டிருந்ததைச் சுட்டிக்காட்டியுள்ளேன். அதன்படி, தற்போது நிலுவையில் உள்ள 53.4 டி.எம்.சி அடி தண்ணீரை வரும் டிசம்பர் மாதத்திற்குள் கர்நாடக அரசு திறந்துவிட வேண்டும். இடைக்கால நடவடிக்கையாக அடுத்த 15 நாட்களில் 30 டி.எம்.சி அடி தண்ணீரைத் திறந்துவிட உடனடியாகக் கர்நாடக முதலமைச்சர் உத்தரவு பிறப்பிக்க வேண்டும். தமிழக விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பைக் கருத்தில் கொண்டும், உச்சநீதிமன்றம் வைத்துள்ள நம்பிக்கையை நிலைநிறுத்தும் வகையிலும், அடுத்த 15 நாட்களில் 30 டி.எம்.சி அடி தண்ணீரைத் திறந்துவிட கர்நாடக மாநில முதலமைச்சர் உடனடியாக உத்தரவு பிறப்பிக்க வேண்டும். டிசம்பர் மாத இறுதிக்குள், மேலும் 23.4 டி.எம்.சி அடி தண்ணீரைத் திறந்துவிடவும் உத்தரவிட வேண்டும்.

## மாண்புமிகு பாரதப் பிரதமர்
## டாக்டர் **மன்மோகன்சிங்** அவர்களுக்கு
## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
## செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
## எழுதியுள்ள கடிதத்தின் தமிழாக்கம் (23.8.2012)

நதிநீர்ப் பங்கீட்டில், சில குறிப்பிட்ட பிரச்சினைகள் குறித்து முடிவெடுக்க வேண்டியுள்ளதால், காவிரி நதிநீர் ஆணையத்தை அவசரமாகக் கூட்ட வேண்டும் என வலியுறுத்தி, கடந்த மே மாதம் 18 ஆம் தேதி, நான் தங்களுக்குக் கடிதம் எழுதியிருப்பதை நினைவு கூர்கிறேன். எனது இந்தக் கோரிக்கை, இதுவரை நிறைவேற்றப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

காவிரி நதிநீர்ப் பிரச்சினை தொடர்பாக, தமிழக அரசு சார்பில் உச்சநீதிமன்றத்தில் கடந்த ஜூலை மாதம் தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால மனு, கடந்த 13 ஆம் தேதி விசாரணைக்கு வந்தபோது, காவிரி நதிநீர் ஆணையக் கூட்டத்தைக் கூட்ட மத்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்று தமிழக அரசு சார்பில் கோரப்பட்டது.

காவிரி நதிநீர் ஆணையக் கூட்டத்தைக் கூட்டுவது தொடர்பாக, மத்திய அரசின் கருத்தை உச்சநீதிமன்றம் அப்போது கோரியது.

காவிரி நதிநீர் ஆணைய விதிமுறைகளின்படி ஆணையக் கூட்டத்தில், ஆணையத்தின் தலைவர் மற்றும் 3 உறுப்பினர்கள் கலந்து கொள்ள வேண்டும் என்பதையும், இந்தக் கூட்டத்தில் கருத்தொற்றுமை அடிப்படையில் முடிவு எடுக்கப்படலாம்.

கருத்தொற்றுமை ஏற்படாத பட்சத்தில், தலைவர் முடிவெடுக்கலாம் என்பதையும் நீங்கள் (பிரதமர்) அறிவீர்கள்.

கடந்த 2003ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 6ஆம் தேதி, உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு தாக்கல் செய்த இடைக்கால மனு ஒன்றின் மீது, உச்சநீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில், காவிரி நதிநீர் ஆணையக் கூட்டத்தில் ஒருமித்த கருத்து உருவாகவில்லை என்றால், ஆணையத்தின் தலைவரான பிரதமரின் முடிவே இறுதியானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, தற்போதைய சூழ்நிலையில், காவிரி நதிநீர் ஆணையத்தின் தலைவர் என்ற முறையில் தாங்கள் (பிரதமர்), காவிரி நதிநீர் ஆணையக் கூட்டத்தைக் கூட்டி, உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கு விசாரணைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில், வறட்சி கால தண்ணீர்ப் பங்கீடு விதிமுறைகளின்கீழ், கர்நாடகத்தில் இருந்து தண்ணீர் திறந்துவிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

2012–2013ஆம் பாசன ஆண்டில், கர்நாடக அரசு அதன் அணைகளிலிருந்து தமிழகத்திற்கு இதுவரை தண்ணீர் திறந்துவிடவே இல்லை என்பதைத் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதேசமயம், கர்நாடகம், தனது விவசாயத்திற்காக காவிரி நீரை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளது.

கர்நாடக அரசு அதன் அணைகளில் உள்ள காவிரித்தண்ணீரில் மிகக் குறைந்த அளவைக் கூட தமிழகத்திற்கு வழங்காமல் பிடிவாதமாக இருப்பதால், இந்த ஆண்டு இதுவரை பாசனத்திற்காக மேட்டூர் அணையைத் திறந்துவிட முடியவில்லை.

காவிரி நதிநீர் நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவுப்படி, இன்று வரை மேட்டூர் அணைக்கு 95.48 டி.எம்.சி அடி தண்ணீர் வந்திருக்க வேண்டும். ஆனால், மிக மிகக் குறைந்த அளவாக, 9.187 டி.எம்.சி அடி தண்ணீர் மட்டுமே மேட்டூர் அணைக்கு வந்துள்ளது.

மத்திய நதிநீர் ஆணையம் உருவாக்கியுள்ள வறட்சி காலத் தண்ணீர்ப் பங்கீட்டு முறையைப் பின்பற்றும் பட்சத்தில் கூட, இன்று வரை மேட்டூர் அணைக்கு 43.837 டி.எம்.சி. அடி தண்ணீராவது வந்திருக்க வேண்டும்.

தமிழகத்தின் காவிரி டெல்டா பகுதி விவசாயிகள் ஏற்கெனவே அவர்களின் குறுவைப் பருவச் சாகுபடியை இழந்துவிட்ட நிலையில், அவர்களின் வாழ்வாதாரத்திற்காகக் குறைந்தபட்சம் சம்பாப் பருவச் சாகுபடியையாவது மேற்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையோடு காத்திருக்கின்றனர்.

எனவே, வறட்சி காலத் தண்ணீர்ப் பங்கீட்டு முறைப்படி தமிழகத்திற்கு உரிய, காவிரி நதிநீரைக் கர்நாடக அரசு உடனடியாகத் திறந்துவிட வேண்டியது மிகமிக அவசியமானதாகும்.

இந்நிலையில், காவிரி நதிநீர் ஆணையத்தின் கூட்டத்தை உடனடியாகக் கூட்ட தாங்கள் (பிரதமர்) நடவடிக்கை எடுக்க வேண்டும். காவிரி நதிநீர் ஆணையக் கூட்டம் நடைபெறுவதற்கிடையே, தமிழகத்தின் காவிரி டெல்டா பகுதியில் சம்பாப் பருவச் சாகுபடிக்கு உடனடியாகத் தண்ணீர் திறந்துவிடுமாறு கர்நாடக அரசைத் தாங்கள் வற்புறுத்த வேண்டும்.

காவேரி நதிநீர்ப் பிரச்சினை குறித்த உத்தரவில், உச்சநீதிமன்றம் **1991**ஆம் ஆண்டு நவம்பர் **22**ஆம் நாள், குடியரசுத் தலைவருக்குப் பரிந்துரைத்த சிறப்புக் குறிப்பில், பல மாநிலங்களுக்கு உரிமையுள்ள நதிநீர், சம்பந்தப்பட்ட மாநிலங்கள் வழியாகப் பாய்ந்து செல்லும் வழியில், எந்தவொரு மாநிலமும், அந்த நதி, தனது பகுதியில்தான் உள்ளது என்றும், ஓரிடத்தில் தங்காமல் பாய்ந்தோடிக் கொண்டிருக்கும் நதிநீரை, எந்தவொரு மாநிலமும், மற்ற மாநிலங்களுக்கு உரிய பங்கைப் பறிக்கும் வகையில் தனக்கு மட்டுமே சொந்தம் என்றும் உரிமை கொண்டாட முடியாது என உச்சநீதிமன்றத்தின் பரிந்துரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்